உ
சிவமயம்

# அருள் ஒளி

## திருக்கேதீஸ்வரம் - மஹாகும்பாபிஷேக

## சிறப்பு மலர்



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை
2003

11 வது மலர்

மாத இதழ்
ஆனி

# மணிவாசகர் குருபூஜை



## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே
யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரியாயே.

உ

# அருள் ஒளி

## ( மாதாந்த சஞ்சிகை )



ஆசிரியர்

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சுபா[illegible] ஆனி மாதம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 11

## திருக்கேதீஸ்வரத் – திருத்தல மகா கும்பாபிஷேகம்

'' தொண்டர் நாள் தொறும் துதி செய்ய அருள் செய்யும்
கேதீஸ்வர தானே ''

என்று போற்றப்பட்ட திருத்தலம், திருக்கேதீஸ்வரம். சிவபூமி என வரலாறு கூறும் ஈழத் திருநாட்டின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோயில்களில் திருக்கேதீஸ்வரம் முதன்மையானது. கடந்த 13 வருடங்களாக போர் அனர்த்தங்களினால் இத் திருத்தலம் பூஜை வழிபாடின்றி அமைதி பெற்றிருந்தது. இத்தலத்தின் பரிதாப நிலை அறிந்து சைவ உலகம் மிக வேதனைப்பட்டது. பாவம் தீர்க்கும் பாலாவித் தீர்த்தத்தில் நீராடி, பள்ளிச் சிறார் முதல் ஆயிரக் கணக்கான பக்தர்கள் அனுதினமும் ஆனந்தமாய் வழிபாடு செய்த ஆலயம், யுத்த அனர்த்தங்களினால் தரிசிக்க முடியாமல் போனது சைவத் தமிழர்களின் தவக் குறைவே. தேவாரம் பாடப்பட்ட திருத்தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரம் 2000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறுகளைக் கொண்ட திருத்தலம் என வரலாற்றாளர்கள் குறிப்பிடுவர். மாதோட்ட துறைமுகப் பட்டினத்தில் சீர்மேவு திருக்கோயிலாக, இவ்வாலயம் செல்வச் செழிப்போடு விளங்கியுள்ளது. சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய அகநானூற்றில் மாமூலர் என்னும் புலவர் பிரான் மாதோட்ட நன்னகர்ப் பெருமையினைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுநூல் நன் கலம்
பொன் செய் பாவை வயிர மொடாம்பல்
நிலந்தினத் துறந்த நிதியத் தன்ன.

மேலும் மாதோட்ட நகரின் மேன்மை பற்றி, இயன்சான் என்னும் சீனப் பெரியாரும், டோலமி, பிளினி முதலான மேலைநாட்டு சரித்திர ஆசிரியர்களும் வியந்து போற்றியுள்ளனர். கேது வழிபாடு செய்த காரணத்தினால் கேதீஸ்வரம் என இத்திருத்தலம் பெயர் பெற்றது என்பது ஐதீகம். நூற்றுக் கணக்கான கப்பல்கள் மாணிக்கத்திற்காக தரித்துச் செல்லும் துறைமுகப் பட்டினமாக மாதோட்டம் விளங்கியது. ''வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்'' என்பது தேவாரம். இத்தகைய ஆதி வரலாறுகளைக் கொண்ட இப் புண்ணிய தேசம் கண்ணூறு பட்டது போல் அழிந்தொழிந்ததே

16ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயர் வருகையால் இப் புண்ணிய தலம் கிலமுற்றது. இப் பெருங்கோயிலை இடித்த கற்களைக் கொண்டே அந்நியத் துறைமுகத் தளத்தை அமைத்தனர் என அறியப்படுகின்றது. 1872ஆம் ஆண்டு காட்டை வெட்டி உழவு செய்யப் புறப்பட்டவர்கள் கையில் ஓரிரு விக்கிரகங்கள் அகப்பட்ட செய்தி, நல்லை நகர் நாவலர் பெருமானின் செவிகளுக்கு எட்டியது. நாவலர் பெருமான் யாழ்ப்பாணச் சமய நிலை என்ற தலைப்பில் 1872ஆம் ஆண்டு ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். சைவ சமயிகளே! ''மாதோட்டத்தில் தேன் பொந்து ஒன்று கிடைத்துள்ளது. அழிந்தொழிந்து போன திருக்கேதீஸ்வரம் வெளிப்பட்டுள்ளது. எல்லீரும் சிந்தித்து மீண்டும் இவ் ஆலயத் திருப்பணியை நிறைவேற்ற வாரீர்'' என உருக்கமான வேண்டுதல் ஒன்றை அவர் விடுத்தார். அதன் பயனாக 13-12-1893இல் இன்றைய திருத்தலம் அமைந்த பகுதி யாழ் கச்சேரியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டது. இத் திருப்பணி முயற்சியில் நாட்டுக்கோட்டை பழனியப்பர் செட்டியார், வண்ணார் பண்ணை பசுபதிச் செட்டியார் ஆற்றிய தொண்டு அளப்பெரியது. அன்பர்களின் முயற்சியினால் 25-06-1903இல் இன்றைய ஆலயத்தின் முதல் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரனார், சேர். கந்தையா வைத்தியநாதன் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் ஆலயம் பெரு வளர்ச்சி கண்டது. காடாய்க் கிடந்த இடம் திருக்கேதீஸ்வர நகரமாகியது. இராஜகோபுரத்தோடு பெருங்கோயில் உருவாகியதுடன், மடங்கள் வீடுதிகள், பாடசாலைகள், தபாற்கந்தோர், வைத்தியசாலை, குருகுலம் எனத் திருநகரம் விருட்சம் பெற்றது. புகழ் பூத்த யாழ்ப்பாணத்து சைவப் பாடசாலைகள் வருடாந்த மகோற்சவ உபயகாரர்களாக நியமிக்கப்பட்டு விழாக்கள் சிறப்புப் பெற்றன. சிவராத்திரி விழா, புராணங்களில் வரும் கைலாயக் காட்சி போல் எண்ணும் அளவுக்கு இவ் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்று வந்தது. அவற்றை நினைத்துப் பார்க்கின்ற போது நெஞ்சம் அழுகின்றது. திசைகள் தோறும் ஓது

*வார்கள், திருமுறை ஓதுவார்கள், குருகுல மாணவர்கள் சிறிய குடுமியோடு வேத பாராயணம் இசைப்பதும், மயில்கள் கோபுரத்தில் நின்று தோகை விரித்தாடுவதும், பசுக்களும், மான்களும் வீதிகளில் உறங்கிக் கிடப்பதும் கோமாதா பூஜையோடு கோயில் திருக்கதவு திறப்பதும் வெறும் கனவாகிப் போய் விட்டதே எனக் கலங்கி அழுதவர்கள் லட்சக் கணக்கான மக்கள். போரில் உச்சத்தின் இராணுவ களமாக அடைபட்டுப் போயிருந்த ஆலயத்தை இறை அருளால் இன்று மீண்டும் தரிசிக்கும் வாய்ப்பு நெருங்கிக் கொண்டிருக்கின்றது.*

*93 வயதை எண்மித்துள்ள திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையின் இன்றைய தலைவர் ஸ்ரீமான் திரு இ. நமசிவாயம் ஐயா அவர்களின் அயராத முயற்சியால் புனர் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று 06-07-2003இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற விருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சைவத் தமிழர்களின் வாழ்வில் புத்தொளியை ஏற்படுத்தும் நாளாக இந்நாள் அமையும் என்றால் மிகையாகாது. சைவ அடியார்கள், வரலாற்று திருக்கோயிலை வாழ்விப்பதற்கு வாரீர். இவ் ஆலயத்தின் புனித திருப்பணிக்கு எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். திருக் கேதீஸ்வர பெருமானின் கும்பாபிஷேகத்தோடு நாடு நிரந்தர விடிவு பெற வேண்டும் என அனைவரும் ஒன்றுபட்டுப் பிரார்த்தியுங்கள். பஞ்சரதம் ஓடிய பாலாவித்திருவீதி பௌர்ணமிபோல் ஒளி பெறட்டும். உலகிலுள்ள சைவ அன்பர்கள் அனைவரும் திரண்டு வந்து பெருஞ்சாந்தி விழாக் காண்போமாக.*

**ஆசிரியர்**

★ ★ ★

**திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**
**எழுதும்**

## முத்தமிழ் வேதத்தில் ஆகமத்தில் அரும்பொருள் – 4

**என்ற தொடரின் "ஞானம்" என்ற பகுதி அடுத்த இதழில் தொடரும் ... ...**

உ

# ஐந்து பண்பிலும் உயர்ந்து நின்ற ஒப்பற்ற பெருந்தகை ஆறுமுகம்

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

*''மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம். வாக்குக் காயம் ஆனி டத்தைந்து மாடும் அரன் பணிக்காக வன்றோ''*

இந்த அருள் வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து பெருமைபெற்றவர் சைவத் திரு. க. ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள். இப்பெரியாரின் நாவில் நட மாடிய திருமுறைகள் ஓய்ந்துவிட்டன. மேனியெங்கும் பூசப்பட்ட விபூதிச் செல்வம் இன்று எமது மனக்கண்முன் காட்சி தருகிறது. தோய்த்து உலர்ந்த வஸ்திரம் இன்று அமரர் ஆறுமுகம் ஐயாவின் ஞாபகத்தை ஊட்டி நிற்கிறது. கைலாசபிள்ளையார் கோவில் வாசல், ஐயா அவர்கள் இனி எப்பொழுது வருவார் என்று ஏங்கிக் கிடக்கிறது; அதி காலை கேட்கின்ற திருமுறை ஒலி, அவர்கள் இல்லத்தில் ஓய்ந்துவிட் டது. இந்த நிலையில் ஆயிரம் ஆயிரம் அன்பர்களின் கண்ணீரைச் சுமந்து கொண்டு ஐயா அவர்கள் பறந்தோடி விட்டார். இது தான் உலக இயற்கை என்றாலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''நற்றவா உன்னை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே''

என்பது சுந்தரமூர்த்தி நாயனாருடைய தேவாரத்தின் ஓர் அடி. இதற்கு ஏற்ப வாழ்ந்து பூரிப்படைந்தவர் இப்பெரியார்.

இவர்களுடைய குடும்பத்துக்கும் எனக்கும் ஐம்பது வருடகாலத் தொடர்பு உண்டு. எங்கள் இல்லத்தில் நடைபெற்ற அத்தனை சுபகரு மங்களுக்கும் சமுகம் தந்தவர்கள் இப்பெரியாரும் அருமைப்பாரியார் சரஸ்வதி அம்மையாரும் ஆவர். நாமும் 'பாலாவி' இல்லத்தில் மகிழ்ந்து உண்டு காலம் கழித்த நாள்கள் நினைவுக்கு வருகின்றன. அமரரின் அருமை மக்களும் எனது மக்கள் போன்று நேசிக்கப்பட்டவர்களாவர். இந்த நினைவுகள் என்றும் பசுமையாகவே அமைகின்றன. இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார், கோப்பாய் பிள்ளையார் ஆகிய திருக் கோயில்களில் இப்பெரியாரின் அழைப்பின் பேரில் வருடாவருடம் நான் சென்று உரையாற்றுவது வழக்கம். இவற்றையெல்லாம் இன்று நான் எண்ணிப் பார்க்கிறேன். மேலும்,

''தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்ற குறட்பாவுக்கு ஏற்ப தான் பெற்ற பிள்ளைகளை கற்றோர் அவையிலே முன்னிடம் பெற வைத்தவர் இவர். சான்றாக இன்று 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகன் அவர்களைக் குறிப்பிடலாம். இவர் ஒருவரை மாத்திரம் அல்ல ஏனைய பிள்ளைகளையும் அதிபராக, ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, விரிவுரையாளராக கல்விச்சமூகத்தில் இடம்பெற வைத்தவர் இப்பெரியாரே. தன்பிள்ளைகள் போன்று தான் கல்வி கற்பித்த இடங்களிலும் நூற்றுக்கணக்கான அறிஞர்களைத் தோற்றுவித்தவரும் இவரே.

> "மகன்றந்தைக் காற்று முதவியிவன்றந்தை
> யென்னோற்றான் கொலலெனுஞ் சொல்"

என்ற குறட்பாவையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பிள்ளைகளினால் பெருமை பெற்றவரும் இவரே. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து பண்பினாலும் உயர்ந்தவர்கள் இப்பெரியாரும், குடும்பத்தவர்களும் ஆவர். சைவத்தமிழ் மக்கள் மாத்திரமின்றி, கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர் அமரர் ஆறுமுகம் ஐயா. உண்மையிலேயே இப்பெரியாரின் அந்திமக் கிரியையிலே பங்கு பற்றிய ஒரு பெருங்கூட்டம் இவற்றுக்கெல்லாம் சான்று பகரும். இவற்றை எல்லாம் சொல்லிச் சொல்லி ஆறுதல் அடைவது ஒன்று தான் எமக்குத் தெரிந்த வழி. எனவே, அமரர் ஆறுமுகம் ஐயா அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி அமைவோமாக!

நன்றி — உதயன்

---

# 'வீரத்தமிழறிஞன் வித்துவான் வேலன்'

க. சிவராமலிங்கம்
(முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இரு ஆண்டுகள் மிக நெருக்கமாக நட்புப் பாராட்டி வாழ்ந்தோம்.

வேலன் அவர்களின் பின்புலத்தை ஓரளவு தெரிந்தவன் ஆகையால், பல வேளைகளில் கருத்துமோதல்கள் ஏற்பட்ட போதும் நட்புக்குப் பங்கம் ஏற்பட்டதில்லை.

பல்கலைக்கழகத்தில் இலங்கை மாணவரிடையே இவர் தனிரகம். 'காட்டிலே தனித்து வாழ வேண்டிய ஒருவர் எங்களிடையே வாழ்ந்து வந்தார்' என்று கருதியவர்கள் பலர். இத்தனைக்கும் காரணம் அவருடைய விட்டுக்கொடுத்து தலைசாய மறுக்கும் மறத்தமிழ் நெஞ்சமே.

மிகக் கடுமையான புறத்தோற்றத்தினுள்ளே மிகமிக நெகிழ்வான உள்ளம் படைத்தவர். இப்பண்பு வேலன் அவர்கள் நிமிர்ந்து நின்ற பிற்காலத்தும் அவரிடம் நிறைந்து கிடந்தது. எங்கள் நண்பர் ஒருவருக்கு வலது குறைந்த குழந்தை கிடைத்தபோது, தந்தை கண்ணீர் விட்டாரோ தெரியாது. ஆனால், வேலன் கண்ணீர்விட்டு அழுது என்னையும் அழவைத்தவர். வெளிவேஷமற்ற உறைப்பான தெய்வபக்தி உள்ளவர். ''சிதம்பரம் போய்வருவோம் வாருங்கள்'' எனக் கேட்டபோது, ''எனக்காகவும் கும்பிட்டு வா'' என்று சொல்லி நிற்பவர். ஆனால், ஆழமான சிவப்பற்று உள்ளவர்.

பிற்காலத்தில் அரசியலில் பல குத்துக்கரணங்கள் போட்டவர்தான். அவையனைத்தும் நாடாளுமன்றில் உண்மையான தமிழ் ஒலிக்கவேண்டுமென்ற ஆசையே என்பதைப் பலரறியார்.

அடியேன் பொதுவுடைமை மேடைகளில் சொல்லாடியபோது அதையேற்காது, ''நீ வீணாக கத்திச் சாகப்போகிறாய், இச்சித்தாந்தம் அழகானது. ஆனால், இவ்வுலகத்தில் நடைமுறைப்படுத்த முடியாதது'' என்று செவி கைக்கக் கூறிய நண்பர்,

> ''முகநக நடப்பது நட்பன்று: நெஞ்சத்து
> அகம்நக நடப்பதே நட்பு''

இது நட்புக்கு இலக்கணமானால் நண்பர் வேலன் அவர்கள் இதன் இலக்கியம்.

நெஞ்சு உள்ளவரை நீங்காத நினைவுச் சின்னமாய் இலங்கும் நண்பர் வேலன் அவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணிகள் பல. பற்பல மாணவர்களை மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலிய பாடசாலைகளில் கற்பித்து உருவாக்கி விட்டவர். சிவயோக சுவாமிகளைப் பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். அண்மையில் ''வருக தமிழர் பொற்கலம்'' என்ற நூல் உள்ளிட்ட பல நூல்களை வெளியிட்டவர்.

உண்மையில் இறுதிவரை தமிழை நேசித்த வீரத்தமிழ் அறிஞனாகவே வாழ்ந்தவர் வித்துவான் வேலன்

நன்றி — உதயன்

உ
சிவமயம்

# சைவப் பண்பாடு பேணுவோம்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

சைவசமயம் மெய்ச்சமயம் என்று நிறுவுவதற்கு இப்பூமியில் அவதரித்தவர்களே, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்னும் சமயகுரவர் நால்வரும் ஆவர். இந்த நால்வரின் சொற்படி நாம் நடப்போமானால், இறைவனை விசாரித்து அவன் சொல்கேட்டு நடப்பதற்குச் சமனாகும். இறைவனின் கருத்தை உணர்ந்தவர்கள் இந்நால்வரும். இறைவனால் உணர்த்தப்பட்ட கருத்துக்களைத் தேவார திருவாசகங்களாக நமக்குத் தந்தவர்கள் இந்த நால்வரும். நாலு பேரைக் கேட்டு நடக்க வேண்டும் என்றும், நாலுபேர் சொன்னபடி செயல்படவேண்டும் என்றும் பெரியோர்கள் கூறுவதைக் கேட்டுள்ளோம். அந்த நாலு பேரும் வேறுயாருமல்ல, இந்தச் சமய குரவர் நால்வரும் தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சைவசமயத்தவர்கள் ஓதி உணர வேண்டிய தமிழ் வேதங்கள் தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம் என நாவலர் பெருமான் சைவ வினாவிடையில் கூறியுள்ளார். தேவாரம், திருவாசகம் ஆகிய இரண்டும் சைவத்தமிழ் மறைகள், மந்திரங்கள் ஆகும். மந்திரங்கள் என்பன நிறைமொழி மாந்தரின் மறைமொழிகள். நினைப்பவனைக் காத்தருளும் தன்மையைப் பெற்றிருப்பதனால் தேவார, திருவாசகங்கள் மந்திரங்கள் எனப்படுகின்றன. மந்திரங்களை ஓதுபவர்களும் தூய்மையாக, ஆசாரசீலத்துடன் இருந்து சொல்லுதல் வேண்டும். கேட்பவர்களும் அவ்வாறே அமைதல் வேண்டும்.

''மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராய்; ஆசாரம் உடையராய்; சிவதீட்சை பெற்றவராய் உள்ளவரே'' தமிழ்வேதம் எனப்படும் தேவார, திருவாசகங்களை ஓதுதற்குத் தகுதியுடையோராவர் என நாவலர் பெருமான் கூறியுள்ளார். நூல்களை நிலத்திலேனும், ஆசனத்திலேனும், படுக்கையிலேனும், மடியிலேனும் வைத்தல் ஆகாது என்பது அவரின் நிலைப்பாடு.

தமிழ் மறையான தேவார திருவாசகங்களை ஓதவும் ஓதக் கேட்கவும் நாம் உரியதகுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தகுதியைத் தருவது தீட்சையாகும். சமயதீட்சை பெற்றுக் கொள்வதன் மூலமே ஒருவர் சைவசமயத்தில் பிரவேசிக்கிறார்.

சைவசமயத்தவருக்குரிய முதல்தீட்சை, சிவதீட்சை ஆகும். சமய தீட்சை என்றும் அதனைக் கூறுவர். சைவசமயி ஆவதற்கு முதற்படி சிவதீட்சை பெறுதலாகும்.

தீட்சை என்பது, நம்மைப் பீடித்துள்ள மலங்களை வலிகெடச் செய்து, ஞானமாகிய அறிவைக் கொடுப்பது என்பர். நம்மில் மலங்கள் வலிகெடும் போதுதான் இறைவனின் திருவருள் பதிவதற்கு ஏதுவாகும்.

தீட்சையை ஒரு குருவிடமிருந்தே பெறுதல் வேண்டும். ஞானசாரியனாக விளங்கும் குரு சகல ஆசாரங்கள், ஒழுக்கங்களில் சிறந்து விளங்கவேண்டும்.

சமய காரியங்கள், ஏனைய நற்காரியங்களை ஆற்றுவதற்குத் தீட்சை ஒருவர்க்குத் தகைமையையும் தகுதிப்பாட்டையும் வழங்குகிறது.

சைவசமயிகள் தீட்சை பெற்று நியமமாகச் செபிக்க வேண்டிய சிவமூலமந்திரம், ஸ்ரீ பஞ்சாட்சரம் எனும் ஐந்தெழுத்து மந்திரமாகும். மதுபானமும், மாமிசபோசனமும் இல்லாதவராய், ஆசாரம் உடையராய், சிவதீட்சை பெற்றவராய் உள்ளவர்களே ஐந்தெழுத்து மந்திரம் செபிப்பதற்கு அருகதையுடையர் ஆவர். நமக்கு ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்று தேவாரம் அறிவிக்கிறது. ''நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க'' என்கிறது திருவாசகம். ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபிக்கும்போது நம் உள்ளம் ஒருமுகப்பட்டுச் சிவபெருமானிடத்திலேயே அழுந்திக்கிடத்தல் வேண்டும். உள்ளத்தை உலகியல் காரியங்களில் அலையவிட்டுக் கொண்டு, ஐந்தெழுத்தை ஓதுவதினால் பயனில்லை.

சிவதீட்சை பெறுதல், அனுட்டானம் பண்ணுதல், திருவைந்தெழுத்து ஓதல்; தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களைப் பண்ணோடும் பக்தியோடும் இசைத்தல்; ஆலய வழிபாடு, நலிந்தோர்க்கு உதவுதல், நல்லொழுக்கம் பேணுதல் முதலியனவற்றை ஒவ்வொரு சைவனும் சமயப்பழக்கமாக மேற்கொண்டு ஒழுகிவருதல் இன்றியமையாததாகும். இவற்றை மீறுபவர்கள், சைவராக விளங்கத்தகுதியற்றவர்கள் ஆகிவிடுகின்றனர்.

''இரவுக்குத் தேவையானவற்றைப் பகலில் தேடவேண்டும். முதுமைக்கு வேண்டியவற்றை இளமையில் தேடவேண்டும் மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையின் தேடவேண்டும்'' என்பது வல்லபதேவன் அனுபவவுரை, சைவப்பண்பாட்டிலும், ஆசாரங்களிலும் நாம் இம்மையில் ஈடுபடவேண்டும். அதுவும் இளம்பராயத்திலிருந்து ஈடுபடவேண்டும். அதனால் இம்மைக்கும் நன்மை, மறுமைக்கு நன்மை பயக்கும்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

உ
சிவமயம்

திருவாதவூரடிகள் திருநாள்
ஆனி – மகம்

# பாவையில் பாவையர்க்கு பயிற்றும் சமயப் பண்பு:

திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

பாவை — திருவாசகத்தில் திகழும் திருவெம்பாவை. பாவையர் தமிழ்ப் பெண்கள். பயிற்றுதல் — பண் சுமந்த பாடலோடு ஊட்டுதல் உணர்த்துதல். சமயப் பண்பு — சிவநெறிச் சார்பு, ஆக. மணிவாசக னார் திருவெம்பாவையில் தமிழ்ப் பெண்களுக்கு உணர்த்தும் சைவ ஒழுகலாறு எனக் கொள்ளலாம்.

திருவெம்பாவை மார்கழித் திருவாதிரைச் சிறப்பை வியந்து ஓது வது. திருவாசகத்தில் விளங்கும் ஐம்பத்தொரு தலைப்புக்களில் திரு வெம்பாவையும் ஒன்று. திருவெம்பாவை திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் அருளிச் செய்யப்பெற்றது.

திருவாதவூரடிகள் திருவண்ணாமலையை ஏத்தி இறைஞ்சி அங்கு சின்னாள் உறைந்தார். அந்நாளில் அழகினையுடைய ஏழுவகைப் பரு வப் பாவையரும் மார்கழி மாசத்துத் திருவாதிரைத் தினத்திற்கு முன் பத்துத் தினங்கள் தோறும் ஒருவரை ஒருவர் வைகறைப் பொழுதில் அழைத்து ஒருங்கு கூடிச் சென்று, 'கொங்கைகள் பொங்கக் குடை யும் புனல் பொங்கப் பங்கயப் பூம்புனல் பாய்ந்து நீராடுவோர்கள்'

அம் மாதர் கொள் மாதரின் இயல்பு கண்ட திருவாதவூரடிகள் அவர்கள் கூறிய கூற்றாகத் திருவெம்பாவையைச் செப்பியருளினார் என்பது திருவாதவூரடிகள் புராணம்.

''அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்ற தாக மன்னிய திருவெம்பாவை பேசி —'' என்பர் கடவுள்மா முனிவர்.

'சக்தியை வியந்தது' என்னும் விளக்கம் திருவெம்பாவைக்கு வகுக்கப்பட்டுள்ளது. தத்துவஞானிகள், திருவெம்பாவை — மனோன் மணி, சர்வபூத்தமணி, பலப்பிரமதனி, பாவிகரணி, கல்விகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சத்திகளுள் ஒருவர் ஒரு வரைத் துயில் எழுப்பியதாகவும் எல்லோரும் ஒன்று சேர்ந்து இறை

வனை வணங்கும் பொருட்டுத் தம்முள் பாடுவேதாகவும் இயையும் என்பர். சத்திகளின் செயற்பாட்டினால் அனந்தர் வாயிலாக அசுத்த மாயைக்குக் கீழ்ப்பட்டவற்றின் படைப்பாதி நிகழும் என்பது அன்னார் கொள்கை,

திருவெம்பாவையின் உள்ளார்ந்தமான கருவூலம் அங்ஙனம் அமையினும் சாதாரண வெளிப்படைக் கருத்தும் ஒன்றுளது. அது திருவாதவூரடிகள் தாய்க்குலம் என்றென்றும் சலப்பின்றிச் சிவநெறியில் தம்மை நிலைப்படுத்தும் சமயப் பண்பு. சிவநெறிச் சார்பு. சிவபிரான் இப்படிப் பட்டவர். அவரை வழிபாடு செய்யும் முறைமை. அவ்வழிபாட்டால் பெறத்தக்க பேறு. அப்பேற்றை இறைவனிடத்தில் விண்ணப்பிக்கும் முறைமை என்பன. சைவசித்தாந்த கோட்பாட்டு நூல்களைக் கற்றோ அல்லது கற்றுணர்ந்து வல்லாரிடத்தில் கேட்டு அறிந்து ஒழுகுதல் ஒரு சிலரால் ஆகுமே அன்றி எல்லாத் தமிழ்ப் பெண்களாலும், ஆகாது. அவ்வுண்மையை உளத்தில் கொண்டு போலும் மாணிக்கவாசகனார் மார்கழித் திருவாதிரைச் செல்வமாகிய திருவெம்பாவையில் சாதாரண தமிழ்ப் பெண்மணிகள் செவிவாயிலாகக் கேட்ட மாத்திரத்தில் சமய ஒழுகலாற்றை நெஞ்சில் பதித்துக் கொள்ளும் வகையாகச் சமய உண்மைகளாகிய சித்தாந்தக் கருவூலங்களைத் திருவெம்பாவைப் பாடலுக்குப் பாடல் பழத்தில் பருவூசி பதித்தாற் போல் விதைத்துள்ளார். அவற்றுள் ஒரு சில நுட்பங்களை ஈண்டு காண்போம். அவற்றை விழுப்பம் பயக்கும் சைவ ஒழுக்க விழுமியங்களாக விரைந்து ஏற்றுக்கொள்க. தவறாது அன்றாட வாழ்க்கையில் பயிலப் பழகுக.

## 1. இறைவனுடைய புகழைக் கேட்கும் முறைமை :

சிவபிரானுடைய புகழைச் செவிமடுக்கும் போதெல்லாம் காதலாகிக் கேட்க வேண்டும். மனம் கசிந்து கேட்க வேண்டும். கண்ணீர் தாரையாக பெருக உள்ளம் உருகிக் கேட்க வேண்டும். விம்மிக் கேட்க வேண்டும். மயிர்க்கூச்செறிந்து புளகாங்கிதம் கொள்ளக் கேட்க வேண்டும். இந்த உண்மைகளைக் பின்வரும் திருவெம்பாவை வாக்குகள் வாயிலாக வெளிப்படுத்துகின்றார் வாதவூர் வள்ளலார்.

'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய் வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம் மறந்து போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன் ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே — பாடல் — 1

'விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக் கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ள முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் பாடல் — 4

## 2. இறைவனை ஏத்தும் முறைமை :

' என் அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் — பாடல் — 3

**3. மனத்தூய்மை உள்ளவர்களே சிவன்புகழ் பாட வேண்டும் :**

*'சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை — பாடல் – 3*

**4. வைகறையில் துயில் எழுதல் வேண்டும் :**

*''ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ*

*''கண்ணைத் துயின் றவமே காலத்தைப் போக்காதே — பாடல் – 4*

*''...இன்னம் புலந்தின்றோ, வானே நிலனே பிறவேயறிவரியான் தானேவந்தெம்மை தலையணித் தாட் கொண்டருளும் வான்வார் கழல் பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய் — பாடல் – 6* இதனால் இறை *புகழ் ஏத்த வைகறைப் பொழுது ஏற்புடைத்து என்பது பெற்றோம்.*

**5. ஓலமிட்டுச் சிவநாமம் உரைக்க வேண்டும் :**

*''ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான் சீலமும் பாடிச் சிவனே சிவனே யென்று ஓல மிடினு முணராயுணராய் காண் — பாடல் – 5*

*6. சிவசின்ன ஒலி கேட்டளவில் சிவ சிவ என்று தியானிக்க வேண்டும் ''...பலவமரர் உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரார் சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய் தென்னவென் னாமுன்னந் தீசேர் மெழு கொப்பாய்...''*

**7. சங்கொலிப்பப் புகழ் ஒலிக்க வேண்டும் :**

*''எழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும் கேழ்இல் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ — பாடல் – 8*

**8. பாரெல்லாம் சிவனையே பாட வேண்டும் :**

*'ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை ஏழை பங்காளனையே பாடு*

**9. கன்னியர் கணவனைப் பெறக் கறைக் கண்டவரிடம் வேண்டுதல் செய்யும் முறைமை :**

*'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே வுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம் முன்னடியார் தாள்பணிவோமாங் கவர்க்கே பாங்காவோம் மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து சொன் பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ மின்ன வகையே யெமக் கெங்கோ னல்குதியேல் என்ன குறைமிலேம் — பாடல் – 9*

*'உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்க மென்றங்கப் பழஞ் சொற் புதுக்குமெம் மச்சத்தால் எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப் போம் கேள் எங்கொங்கை*

*'நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க வெங்கை யுனக்கல்லா தெப் பணியுஞ் செய்யற்க கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க வீங்கிப் பரிசே யெமக் கெங்கோ னல்குதியே லெங்கெழிலென் ஞாயிறு எமக்கு*

'... சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா வையாநீ யாட்கொண்டருளும் விளையாட்டினுய்வார்க ளுய்யும் வகை யெல்லா முய்ந்தொழிந்தோ மெய்யாமற் காப்பாய் எமை—' பாடல்–11

**10. நீராடுகையிலும் இறைவனை நினைக்க வேண்டும்:**

'...பூத்திகளும் பொய்கை குடைந்து டையான் பொற்பாதமேத்தி யிருஞ்சுனைநீ ராடு — பாடல் – 17

'... கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப் பெண்ணேயிப் பூம் புனல் பாய்ந்தாடு — பாடல் – 17

'...கண்ண ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப் பூம்புனல் பாய்ந் தாடு — பாடல் – 18 நீராடுகையில் இறைபுகழ் பாடுவதனால் ஏனைய செயக்காரியங்களிலும் சிவநாமம் சொல்ல வேண்டுவதை சொல்லாமல் சொல்லி வைத்தார்.

இவை போன்ற சிவநெறி விழுமியங்கள் அனேகம் திருவாசகத் திருவெம்பாவைத் திருப்பதிகத்தில் உண்டு. அவற்றைச் சிவநெறிக் குலத்துத் தாய்மார்கள் உற்று உணர வேண்டும். அந்நெறிப் பழக்கத்தில் வாழ்க்கையை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வொழுக்கம் மேலான விழுப்பங்களை என்றும் நல்கும்.

இறைவனுக்கு இனிக்கத் திருவெம்பாவையைப் பத்தியோடு பண் பரக்கப் பாட வேண்டும். அத்தோடு கடமை முடிந்தது என்று கருதலாகாது. உண்மையை ஓர்ந்து சிவநெறி சார்ந்து ஒழுகுதல் மாணிக்க வாசக சுவாமிகள் தமிழ்ப் பெண்களிடத்தில் கண்ட கனவை நனவாக்கும். அது மார்கழித் திருவாதிரை விழுப்பத்தைத் தமிழ்ப் பெண்கள் தாம் அடையப் பெற்றது என்பதற்கு ஐயுறவு இல்லை.

---

## தாய்

தாய் நல்ல தாயாம்
எம்மை ஈன்றெடுத்த தாயாம்
தன்நலம் கருதாத் தாயாம்
எம்மைக் காத்துவளர்க்கும் தாயாம்

மழலை மொழி கேட்கவே
கொஞ்சி விளையாடும் தாயாம்
ஆனா சொல்லித் தந்த
அன்பு மிக்க தாயாம்

மலரைக் காட்டி எம்மை
மயக்க வைக்கும் தாயாம்
நிலவைக் காட்டிச் சோறு
தீத்தி விடும் தாயாம்

பாட்டுப் பாடி அணைத்து
தூங்க வைக்கும் தாயாம்
தாயின் அன்பே பெரிது
நாமும் தாயை வணங்கிடுவோம்.

ஆக்கம் : செல்வி கிருஸ்ணசாமி ஜமுனாதேவி
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

தொடர் – 4



# சிறுவர் கந்தபுராண அமுதம்

— மாதாஜி

## 12. முருகப் பெருமான்:

முருகன் என்ற சொல் அழகன், இளமை என்பது பொருளாகும். தமிழின் தெய்வம் முருகன். முருகனுக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் இளமையும் இனிமையும் உடையது. இதனால் தமிழ் என்றும் கன்னித்தன்மை உடையது. தமிழ்மொழியில் பன்னிரண்டு உயிர் எழுத்துகளுண்டு. முருகப் பெருமானுக்கும் பன்னிரண்டு தோள்களுண்டு. தமிழில் பதினெட்டு மெய்யெழுத்துக்கள் இருப்பது போல, முருகனின் ஆறு திருமுகங்கள் ஒவ்வொரு முகத்திலும் மூன்று மூன்று கண்களாக பதினெட்டுக் கண்கள் இருக்கின்றன. தமிழில், வல்லினம் மெல்லினம் இடையினம் என்று மூன்று இனங்களுண்டு. அவ்வாறு ''முருகன்'' என்ற பெயரில் மூவினமும் அமைந்துள்ளது. முருகன் கரத்தில் ''வேல்'' என்ற ஆயுதம் இருப்பது தமிழின் ஆயுத எழுத்துப் போன்றதாகும். இச்சை, கிரியை, ஞானம் என்பவை சார்பெழுத்துப் போன்றவையாகும்.

இதனால் முருகன் வேறு தமிழ் வேறு அல்ல. எனவே முருகனே தமிழ். தமிழே முருகன். என்பதைச் சிறுவர்களாகிய நாம் எமது பிஞ்சுள்ளத்தில் பதித்தல் வேண்டும். முருகனைத் தமிழின் தெய்வம் என்பான் ஒல்காப் பெரும்புகழ் படைத்த தொல்காப்பியர்.

சரவணப் பொய்கையில் ஆறு அனற் பொறிகளும் ஆறு குழந்தைகளாயின. அந்த ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்களே பால் கொடுத்து சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள். அந்த ஆறு குழந்தைகளாகிய முருகன்மாரில் ஒரு முருகன் அழும், ஒன்று நித்திரை செய்யும், ஒன்று விளையாடும், ஒன்று தவழும், ஒன்று மழலை பேசும், ஒன்று பால் குடிக்கும், ஒரு முருகன் தளர்நடை நடக்கும். அந்த ஆறு முருகன்களுக்கும், சரவணப் பொய்கையில் காணப்பட்ட ஆறு செந்தாமரை மலர்களே தொட்டில்களாகக் காணப்பட்டன. ஒரே நேரத்தில் ஆறு குழந்தைகளும் ஆறு செந்தாமரைப் பூவில் துயில் கொள்ளத் தென்றற்காற்றில் செந்தாமரை மலர்கள் அசையும் போது ஆறு முருகன்மாரின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

13. கந்தன் :

முன்பு ஒருமுறை சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து ஆறு நெருப்புப் பொறிகள் பறந்தன என்று அறிந்தோம். அந்த நெருப் புப் பொறிகளின் வெம்மைக்காற்றாது உமாதேவியாரும் ஓடினாள். அவளுடைய காலில் இருந்த சிலம்புகளின் நவரத்தினக் கற்கள் வெளியே தெறித்தன.

அவை பிரகாசித்துக் கொண்டிருந்தன. அந்த ஒளியில் உமா தேவியாரின் பிரதிபிம்பங்கள் காணப்பட்டன. அவை நவசக்திகளாகும். சிவபெருமான் அந்தச் சக்திகளை வெளியே வரும்படி பணித்தார். நவரத்தின மணிகளிலிருந்தும் நவசக்திகள் வெளியே வந்தார்கள். அவர்கள் சிவபெருமானைக் கண்டு நாணமுற்றனர். இதன் காரண மாக நவசக்திகள் கருவுற்றார்கள். இதனைக் கண்ட உமாதேவியார் அவர்கள் மீது கோபம் கொண்டு, எனக்குத் துரோகமாக நடந்தமை யால், நீண்டகாலம் கருவுடன் இருப்பீர்களாக எனச் சபித்தாள்.

நவசக்திகள் உமாதேவியாரின் சாபத்தைக் கேட்டுப் பயந்தார்கள். நடுநடுங்கினார்கள். இதனால் அவர்கட்கு நன்றாக உடம்பில் வியர்வை கொட்டியது. அந்த வியர்வையில் இருந்து, சிவபெருமானின் அருளால் இலட்சக் கணக்கான வீரர்கள் தோன்றினார்கள். அந்த வீரர்கள் கண்ணுதற் பெருமானாகிய சிவபெருமானைப் போற்றி நின்றார்கள்.

மைந்தர்களே! அசுரர்களை அழிக்க உதித்த எமது மைந்தன் முருகப் பெருமானுக்கு நீங்கள் படைகளாக இருப்பீர்களாக வென்று அவர் களுக்குச் சிவபெருமான் வரம் கொடுத்தார்.

உமாதேவியாரால் சபிக்கப்பட்ட நவசக்திகள் உமாதேவியாரைத் தியாகம் செய்து கொண்டு நீண்ட காலம் தவம் இருந்தார்கள். கருவில் இருந்த குழந்தைகளும் சிவனை நினைந்து நீண்ட காலம் சிவயோக நிலையில் நவசக்திகளின் வயிற்றில் இருந்தார்கள்.

ஆண்டுகள் செல்லச் செல்ல கருவின் பாரந்தாங்க முடியாது நவ சக்திகள் வருந்துவதைக் கண்ட உமாதேவி இரங்கி சாப விமோசனம் அளித்தாள்.

நவசக்திகளில் மாணிக்க வல்லி வீரவாகு தேவரையும், மௌத்திக வல்லி வீரகேசரியையும், புட்பராக வல்லி வீர மகேந்திரரையும், கோமேதக வல்லி வீர மகேச்சரரையும், வைடூரிவல்லி வீரபுரந்திரரையும், வைரவல்லி வீராக்கதரையும், மரகத வல்லி வீர மார்த்தாண்டரையும், பவள வல்லி வீராந்தகரையும், இந்திர நீலவல்லி வீர தீரரும் அவதரித் தார்கள். இந்த வீரர்கள் சிவபெருமானையும், உமாதேவியாரையும் வணங்கினார்கள். அப்போது சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, நவசக்திகளின் உந்திக் கமலத்தினின்று அவதரித்த, இந்த நவ வீரர்கள் நமக்குப் புதியவர்கள் அல்லர். இவர்கள் நமது நந்திகணத் தலைவர்

களே எனத் திருவாய் மலர்ந்தார். உமாதேவியாரும் நவசக்திகளின் புத்திரர்களை ஆசீர்வதித்து வாழ்த்தினார். அந்த நவ வீரர்கள், முன் நவசக்திகளின் வியர்வையில் இருந்து அவதரித்த இலட்ச வீரர்களு டன் சேர்ந்து, சிவபெருமானின் திருக்கோவிலில் சிவபெருமானையும் உமாதேவியாரையும் பூசித்துத் தியான தவமிருந்தார்கள்.

ஒருநாள், சிவபெருமான், உமாதேவியாரை அழைத்து, எமது குழந்தைகள் சரவணப் பொய்கையில் விளையாடுகின்றார்கள் அவர்கள் விளையாடும் திருவிளையாடலை நாமும் பார்க்கலாம் வாவென்றார். உமையவளும் அன்பு மேலிடும் உணர்ச்சியுடன் சிவபெருமானுடன் சர வணப் பொய்கைக்குப் போனாள்.

சரவணப் பொய்கைக் கரையில் இடபாரூடராய் அகிலாண்டேஸ்வரி உமையும் சிவபெருமானும் நின்றார்கள். குழந்தைகளை இமயமலை கொண்டு போவதென முடிவு செய்தார்கள். குழந்தைகள் அம்மையப் பரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தன.

உமையவள் அன்பு மேலிட்டால் ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்துத் தனது இரு திருக்கரங்களால் வாரியணைத்தாள். என்ன ஆச் சரியம் ஆறுதிருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் பன்னிரு கண் களுடன் கந்தனாக திருமுருகன் காட்சி அளித்தான்.

பின்னர் உமாதேவியார் குழந்தையின் ஆறுதிருமுடிகளையும் உச்சி மோந்து ஞானப்பாலூட்டினார். ஆரம்பத்தில் முருகப்பெருமான் ஆறு கார்த்திகைப் பெண்களிடம் பாலுண்டார்.

## 14. முருகப்பெருமானின் வேறு பெயர்கள் :

சிவபெருமானின் திருமுகங்கள் ஆறில் இருந்தும் பறந்த அக்கினிப் பொறிகள் ஆறையும் முதலில் அக்கினிதேவன் தலையிற் சுமந்து சென்று கங்கையில் விட்டமையால், அக்கினி குமாரன் என முருகப்பெருமான் அழைக்கப்பட்டான். பின்னர் கங்காதேவி அந்த ஆறு அக்கினிப்பொறி களையும் சரவணப் பொய்கையில் விட்டாள் இதனால் முருகப்பெரு மான் காங்கேயன் என அழைக்கப்படுகின்றான். சரவணப் பொய்கை யில் ஆறு அக்கினிப் பொறிகளும் ஆறு குழந்தைகளாக அவதாரம் செய்தமையால் ''சரவணபவன்'' என அழைக்கப்படுகின்றான். அந்த ஆறு குழந்தைகளையும், கார்த்திகை மாதர் பாலூட்டி வளர்த்தமையால் கார்த்திகேயன் என்று அழைக்கப்பட்டான். அந்த ஆறு குழந்தைகளை யும், அகில உலகையும் அருள்பாலித்து திருவருள் சுரக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரி உமாதேவி ஒன்றாகச் சேர்த்து அணைத்து ஞானப் பால் ஊட்டியமையால் ஞானபண்டிதன் என்ற நாமத்தைப் பெற்றான். மிகவும் அழகன் இளமையானவன் என்றமையால் முருகன், பாலசுப்பிர மணியன் என்று ஆயிரம் ஆயிரம் நாமங்களாக இருந்து முருகப்பெரு மான் பக்தர்கட்குத் திருவருள் சுரக்கின்றான்.

## 15. மீன்கள் முனிவர்களானமை :

*அகிலாண்டேஸ்வரியாகிய அன்னை உமாதேவி, தனது குமாரனாகிய ஆறுமுகனுக்கு அளவு கடந்த அன்பு மேலிட்டால் ஞானப்பாலமுதம் ஊட்டினாள். அப்போது அந்த ஞானப்பால் சிதறி சரவணப்பொய்கை நீரில் விழுந்தது. விழுந்த அந்தப் பாலமுதை ஆறு மீன்கள் உண்டு சுவைத்தன. என்ன ஆச்சரியம், அந்த ஆறு மீன்களும் ஆறு முனிவர்களாகி உமை, சிவபெருமான், ஆறுமுகன் ஆகியோரைக் கைகூப்பி வணங்கினார்கள்.*

*ஆறு மீன்கள் எவ்வாறு ஆறு முனிவர்களாகின என்று உமாதேவி ஆச்சரியப்பட்டாள். இந்த அற்புதக் கதையை அருளுமாறு சிவபெருமானைப் பிரார்த்தித்தாள்.*


*ஒரு சமயம் வசிட்ட முனிவரின் பேரர்களான ஆறு குழந்தைகள் நீரில் நிர்வாணமாக, அதாவது அரைதுணியேதும் இல்லாமல் நெடுநேரம் விளையாடிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் விளையாடிய சமயத்தில் பல குஞ்சு மீன்கள் இறந்து விட்டன. இதனைப் பராசமுனிவர் கண்டார். ஜீவகாருண்யம் சிறிதும் இல்லாமலும் மானம் இல்லாமலும் விளையாடிய நீங்கள் மீனாகக் கடவீர்கள் என்று சபித்தார். அப்போது அந்த ஆறு முனிவர் குழந்தைகளும் பராசமுனிவரை வணங்கிச் சாபவிமோசனம் கேட்டார்கள்.*

*அப்போது பராசமுனிவர், அசுரரை அழிக்க முருகப்பெருமான் அவதாரம் செய்து சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளையாடுவான் அந்த நேரம் உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்துத் தனது திருமுலைப்பாலை ஆறுமுகனுக்கு ஊட்டுவாள். அந்தப் பால் சிதறி நீரில் விழும். மீன்களாக இருக்கும் நீங்கள் அறுவரும் நீரில் விழுந்த அந்தப் பாலை அருந்தி மீண்டும் சுய உருவம் அடைவீர்கள் என்று சாபவிமோசனம் கொடுத்தார். இந்தக் கதையை சிவபெருமானின் திருவாய் மூலம் உலகமறியச் செய்த உமையவள் மகிழ்ந்தாள்.*

தொடரும்............

### ஓம் பராசக்தி

ஓம்பராசக்தி சண்டிபவானி
உலகநாயகியே உயிர்த்தாயே!
பூம்பொலிவுறு புண்ணிய விண்ணே!
போற்றி போற்றி புலவரின் கண்ணே!
சோகமோகச் சுழனிற் சிக்கிச்
சுருதிகெட்ட துயர்மிகு வாழ்வில்
வேகமாகநின் வீணையை மீட்டி
வேதநாதம் விளைந்திடச் செய்வாய்
தொல்லை மிக்க சுயநலக் கும்பல்
சூதுவாதுடன் சூழ்ச்சிகள் செய்தே
அல்லல் செய்வதை நீயறியாயோ?
அன்பருக் கபயம் அருளாயோ
எல்லையற்ற நின்சிற்சக்தி வெள்ளம்
என்றுமுன்னை நினைப்பவர்களன்றோ
மல்லரக்கர் வளம்பெறச் சாது
மக்களிங்கு மடிவது மாண்போ?
துட்டராக்ஷஸ ரத்தப் பிசாசு
தூருடன் ஒழியத் துணை செய்வாய்
அட்டமங்கலச் செல்வமளிப்பாய்
அழகிளந் திருவே ஜயலக்ஷ்மி!



# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் சிறப்புமிகு உற்சவங்கள்

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்

மாவை முருகப்பெருமான் கோவிலில் நடைபெறும் பல்வேறு உற்சவங்களுள் தைப்பூசத் திருநாளும், ஆனி, ஆடி மகோற்சவாதிகளும், ஐப்பசி சுக்கிரவாரம், கந்தசஷ்டி விழாக்களும், கார்த்திகையில் வரும் திருக்கார்த்திகை விழாவும் மிக மிகப் பிரசித்தமானவையாகும்.

தைப்பூசத் திருநாளன்று ஷண்முகப் பெருமான் தேரின்மீது வந்து அடியார்களுக்கு அருள்தரும் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும். ஆனிமாத பூர்வ பக்ஷ ஷஷ்டியில் துவஜாரோஹணமாகித் தொடர்ந்து இருபத்தைந்து நாட்களுக்கு உற்சவங்கள் நடைபெறும். ஐந்தாம் திருநாளன்று ஷண்முகப்பெருமான் திருநடனமாடும் உற்சவம்

நடைபெறுகிறது. இந்நடனம் வாத்திய இசை, பஜனை ஆகியவற்றோடு நடைபெறுங் காட்சியும் கோலமும் தன்மையும் வேறெங்குங் காண முடியாதவை. கார்த்திகைத் திருநாளன்று அநேகர் காவடியெடுத்தும் நாள் பூராவும் மாவிளக்கேற்றி சகஸ்ரநாமார்ச்சனைகள் செய்வித்தும் தத்தம்வழிபாடுகளை இயற்றுவர். பிள்ளைவிற்றல், அன்னப்பிராசனம், அள்ளுகாசு வழங்கல், மற்றும் தத்தம் நேர்த்திக்கடன்களைப் பூர்த்தி செய்தும், அபிஷேகம் செய்வித்தும் தங்களது வழிபாடுமுறைகளை அடியார்கள் செய்வர். அன்றிரவு மும்மூர்த்திகளும் பூஞ்சப்பரத்தில் வீதிவலம் வருங்காட்சியும், பகலில் மயில் மீதேறிக் கந்தசுவாமியார் வீதிவலம் வருங்காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகிவிடும். இருபத்திரண்டாந் திருநாள் 'மிருகயாத்திரை' என்னும் வேட்டைத்திருநாளாகும். அன்றும் இங்கு ஒரு தனிச்சிறப்பை மக்கள் காண்பார்கள். இருபத்து மூன்றாந் திருநாள் பெரிய சப்பரத் திருநாளாகும்.

ஒவ்வொன்றும் நூறுயாரளவிலிருக்கும் நான்கு வடக்கயிறுகள் பூட்டிய இப்பெருஞ் சப்பரத்தை இழுப்பதற்குப் பத்தாயிரத்துக்கதிகமானவர்கள் வேண்டும். இப்பெருஞ் சப்பரம் அசையும்போது 'இது ஒரு அசையுங் கோபுரமோ', எனவும், 'மாமலையொன்று ஊர்கிறதோ' என்றும் மக்கள் வியப்புறுவர். இச்சப்பரத் திருவிழாவைத் தரிசிக்க இலங்கை யெங்கணுமிருந்து பக்தர்கள் பெருந்திரளாகக் கூடிவிடுவார்கள். இவர்கள் அடுத்தநாள் நடைபெறும் பஞ்சரதோற்சவத்தையும் ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவத்தையும் தரிசித்துத்தான் தத்தம் இல்லங்களுக்கு ஏகுவார்கள்.

### பஞ்சரதோற்சவம் :

இருபத்திநாலாந் நாள் உற்சவம் பஞ்சரதோற்சவமாகும். விக்னேஸ்வரர், கந்தசுவாமி, சந்திரசேகரர், ஷண்முகர், தண்டேஸ்வரர் ஆதியாம் மூர்த்திகள் வரிசையாகத் தேரின்மீதிவர்ந்து வரும் காட்சி உண்மையிற் பார்ப்பதற்கு இரம்மியமான ரோஹணமாகி மகோற்சவங்கள் தண்டேஸ்வர, ஆசார்ய உற்சவங்களோடு இறுதிக்கட்டத்தையடையும். இருபத்தாறாம் நாள் தண்டாயுதபாணி உற்சவம் எல்லா உற்சவங்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்துவிடுகின்றது இவ்வுற்சவம் 1964ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. புராண வரலாற்றை முழுமையாக எடுத்துக் காட்டக்கூடியதாக இவ்வுற்சவம் அமைந்திருக்கிறது. மகோற்சவ காலங்களில் மூன்று பிரகார வீதிகளிலும் சனத்திரள் அதிகரித்துக்கொண்டேயிருக்கும். அங்கு பல்வேறு தற்காலிக வியாபார நிலையங்கள், பொலீஸ், சுகாதார நிலையங்கள், காரியாதிகாரி கந்தோர், தண்ணீர்ப்பந்தர்கள் இப்படியிப்படியே பல தோற்றுவிக்கப்படும். சங்கீத கதாப்பிரசங்கங்கள், இன்னிசைக் கச்சேரிகள் ஆகியனவும் உற்சவ காலங்களில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட வஸந்த மண்டபத்தில் நிகழும்.

**விசேஷ விழாக்கள் :**

நவராத்திரி பூசைகளும் இங்கு நடைபெறுகின்றன. மானம்பூ என்றழைக்கப்படும் 'விஜயதசமி' யிலன்று கந்தசுவாமியார் இங்கிருந்து தெற்கே இருமைல்களுக்கப்பாலுள்ள தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலுக்கு எழுந்தருளுவார். அங்குதான் சமீவிருக்ஷ பூசையும் மகிஷாசுர சம்ஹாரமும்நடாத்தப்படுகின்றன. பின்னர் அங்கிருந்து பற்பல கலை நிகழ்ச்சிகளோடு ஆலயத்திற்கு எழுந்தருளுவார். அன்று வீதியோரங்களிலுள்ள வீடுகள், மண்டபங்கள், வியாபார நிலையங்கள் ஆகியன அலங்கரிக்கப்பட்டிருக்கும்; வாசல்களில் நிறைகுடம் வைத்துச் சுவாமிக்குப் புஷ்ப மாலைகள், பட்டு வஸ்திரங்கள் ஆகியன சாத்தி அடியார்கள் வணங்குவர். ஐப்பசியில் நடைபெறும் ஸ்கந்தஷஷ்டி விழா மிகவும் புனிதமாகவும் முறையாகவும் நடைபெற்று வருகிறது. மக்களனைவரும் கடும் விரதமனுட்டித்து இவ்விழாவினைத் தரிசிப்பார்கள். விரதமனுட்டிப்போர் 'திருச்செந்தூர்ப் புராணம்' படித்தும், கேட்டும் மகிழ்வார்கள். சூரசம்ஹார விழாவும், திருக்கல்யாண விழாவுங் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். விரதமனுட்டிப்போர் யாவரும் முடிவில் சகஸ்ரநாமார்ச்சனைகள் செய்து நோன்பை முடிப்பர்.

கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகையிலன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவிளக்கேற்றியும், நெய்விளக்கேற்றியும் தத்தமது வழிபாடுகளை இயற்றுவார்கள். இரவு மும்மூர்த்திகளும் எழுந்தருளிச் சொக்கப்பனை கொளுத்தி, வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் தருவர். இங்கு கார்த்திகைச் சோமவாரங்களிற் சந்திரசேகரருக்கு விசேஷ பூஜைகள் செய்து வீதிவலம் எழுந்தருளச் செய்வது வழக்கம். மார்கழியில் திருவெம்பாவைப் பூசைகளின் போது சிதம்பரேஸ்வரீ சமேத சிதம்பரேஸ்வரருக்குப் பூஜைகள் நடைபெறும். அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்தருங் காட்சியும், ஆருத்ரா தரிசனத்திற்கு முந்தியதினத்தில் நடராஜப்பெருமான் தேரின்மீதிவர்ந்து வருங் காட்சியும் பக்தர்களைப் பரவசமடையச் செய்துவிடும். அன்றிரவு விசேஷ அபிஷேகமானதும் அதிகாலையில் ஆருத்திரா தரிசனம் நடைபெறும். இவ்வாலயத்தில் கந்தபுராணபடனம் வைகாசியில் ஆரம்பமாகி மகோற்சவ இரண்டாந் திருநாளன்று பூர்த்தியடையும். பூர்த்திவிழாவன்று அந்தணர்களுக்கும் மற்றும் ஏனையோருக்குந் தானங்களுந் தெட்சணைகளுங் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதேபோல் திருச்செந்தூர்ப் புராணபடன முடிவிலும் பக்தர்கள் தானங்களை வழங்கி ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள்.

---

உங்கள் அபிமான 'அருள் ஒளி' கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்
கோவில் வீதி
நல்லூர்.

உ

# இரண்டாவது உலக இந்து மகாநாடு

இந்த ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 6ஆந் திகதி வரை கொழும்பில் மகாநாடு சிறப்பாக இடம்பெற்றது. இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் மகாநாட்டு நிகழ்ச்சிகள் முழுவதும் ஒழுங்காக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மே மாதம் 9ஆம், 10ஆந் திகதிகளில் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்திலும் துர்க்கா தேவி மணிமண்டபத்திலும் இடம் பெற்றது. மேலும் இம்மகாநாட்டு நிகழ்வுகள் மன்னார், வவுனியா, திருகோணமலை, கண்டி, மாத்தளை, பதுளை, நுவரேலியா ஆகிய இடங்களிலும் சிறப்பாக இடம் பெற்றது. அனைத்து நிகழ்வுகளுக்கும் காஞ்சிமட சிவாச்சாரியார் ஆசி வழங்கி ஆரம்பித்து வைத்தார். கொழும்பு இராம கிருஸ்ண மண்டபம், மாணிக்கப்பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபம் என்பன இவ்விழாவுக்கு அணிசெய்தன. ஈழத்து மூத்த சிவாச்சாரியார்களும் காலிமுகத்திடலில் வைத்து கௌரவிக்கப்பட்டார்கள். சுருக்கமாகக் கூறினால் கௌரவ அமைச்சர் திருவாளர் தி. மகேஸ்வரன் அவர்களதும் மகாநாட்டு முக்கியஸ்தர்களதும் அயரா உழைப்பினால் மிக மிக வெற்றிகரமாக இம்மகாநாடு நிறைவு பெற்றது எனலாம். திருபனந்தாழ் ஆதீன முத்துக் குமாரசாமி தம்பிரானுடைய வருகையின்போது எடுக்கப்பட்ட படம் அருள் ஒளியில் இடம்பெறுவது குறித்து ஆனந்தமடைகிறோம்.

தகவல்: திரு. K. K. சுப்பிரமணியம், J. P.

---

**“அருள் ஒளி” வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்**

“அருள் ஒளி” மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான, தரமான, ஆக்கங்களை நாம் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி,

ஆசிரியர்
**“அருள் ஒளி”**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
**“அருள் ஒளி”**
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

உ

சிறுவர் விருந்து

# தாய்நாடு

அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்

---

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து! நீங்கள் காந்தித் தாத்தா, ஆபிரகாம்லிங்கன் ஆகியோரைப் பற்றி எல்லாம் படித்திருப்பீர்கள். தேசப்பற்று நிறைந்த அவர்கள் தம் நாட்டுக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்கள். ஹொலன்ட் தேசத்தின் மௌன் வில்லியம், நமது நாட்டின் சேர். பொன். இராமநாதன் ஆகியோர் தேசப்பற்றுக்கு எடுத்துக் காட்டானவர்கள். இப்படித் தங்கள் தாய் நாட்டின் மீது பற்றுக் கொண்ட சிலரால்தான் ஒவ்வொரு நாடும் உயர்வடைகிறது, காப்பாற்றப்படுகிறது. மதிப்புப் பெறுகிறது.

தனது தாய் நாட்டின் மீது கொண்ட பற்றினால், தான் பெற விருந்த உயர்ந்த வாழ்க்கையைத் தியாகம் செய்த ஒரு பிரசித்தி பெற்ற டாக்டரின் கதை இது.

கடந்த நூற்றாண்டில் அறுவைச் சிகிச்சைத் துறையில் அதியுன்னத சாதனையான இருதய மாற்றுச் சிகிச்சையில் சாதனை படைத்தவர் டாக்டர் கிறிஸ்டின் பெர்ணர்டு ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர். மிகச் சிறப்பாக மாற்று இருதயம் பொருத்தி மனிதரை வாழவைக்கும் வைத்திய சிகிச்சையில் தேர்ந்தவர். வெற்றிகரமான இருதய மாற்றுச் சிகிச்சையைச் செய்து புகழ் பெற்றிருந்த இவரை மேல் நாடுகள் தத்தம் நாட்டில் வந்து குடியேறுமாறு வேண்டின.

கனடா அரசாங்கம் மாதம் ஒரு லட்சம் கனேடிய டொலர் வருமானம் தரும் பதவி ஒன்றை இவருக்கு வழங்குவதாகவும் கனடாவில் வந்து குடியேறுமாறும் அழைப்பு விடுத்தது.

அமெரிக்காவோ மாதம் பத்து லட்சம் அமெரிக்க டொலர் வருமானத்தில் உயர் பதவி வழங்க விரும்பியது. அவருக்குச் சகல வசதிகளுடன் அமெரிக்க குடியுரிமை வழங்க அந்நாடு ஆசைப்பட்டு அழைத்தது. அமெரிக்கா மட்டுமல்ல கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளும் போட்டி போட்டு அழைத்தன. இங்கிலாந்து அரசு டாக்டர் கிரிஸ்டின் பேனாட்ருக்கு மூன்று இலட்சம் டொலர் மாத ஊதியத்துடன் நிரந்தர வதிவிடம் தந்து பணியாற்ற அழைப்பு விடுத்தது.

பிரான்ஸ் மாதம் ஐந்து லட்சம் டொலர்களைத் தம் அரசு தரும் எனவும், மிகக் கண்ணியமாக அழைப்பு விடுத்தது. நிரந்தரமாகத் தம் நாட்டில் தங்கி மருத்துவத் துறையில் சாதனை புரிய வேண்டுமென அவரை அழைத்தது.

இந்த நாடுகள் தனித்தனியே அவருக்கு ஆசைகாட்டின. பல சலுகைகளை வழங்குவதாக வாக்களித்தன. அவர் தம் நாட்டில் தங்கி ஆய்வு செய்ய அனைத்து மூலதனங்களையும் தருவதாக வாக்களித்தன. தம் தேசத்தின் மதிப்பார்ந்த பிரஜையாக அவர் தங்கியிருக்க வேண்டும். அதனால் தம் தேசம் பெருமை அடைய வேண்டும் என அவை மிக மிக விரும்பின.

டாக்டர் கிருஸ்டின் பெர்னார்டு இந்த நாடுகளுக்கு மிகப் பணிவாக — மிக மிக உறுதியாக அளித்த பதில் இதுதான்.

''என்னுடைய தாய்நாடுதான் எனக்கு முக்கியம். உங்கள் நாடு முழுவதையுமே நீங்கள் எனக்கு எழுதிக் கொடுப்பதாய் இருந்தாலும் என்னால் என் தாய் நாட்டை விட்டு வர முடியாது. மன்னிக்கவும்.''

பார்த்தீர்களா? இந்த விஞ்ஞான யுகத்திலும் கூட இப்படி மருத்துவத் துறையின் தலைசிறந்த மேதை தனக்குக் கிடைக்கவிருந்த வாய்ப்பு வசதியை எல்லாம் மறுத்துவிட்டுத் தாய் நாட்டை மதித்தார் என்றால் ''தாய் நாடு'' எவ்வளவு மதிப்பிற்கு உரியது! ஆம், 'பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே.'

★ ★ ★

## வேல்

சக்தி வேல் ... ... வீர வேல்
நம்மைக் காக்கும் ஞானவேல்
சூரனை சங்காரம் செய்த
வெற்றிவேல் ... ... இது வெற்றி வேல்
அசுரர்களை அழித்த வேல் .... ...
ஆணவத்தை அழித்த வேல் ... ...
கன்மத்தை அழித்த வேல் ...
மாயையை அழித்த வேல் ... ...
சிவ மைந்தனின் வேல் ... ... இது
எம்மைக் காக்கும் முருகன் வேல் ... ...

## வேலைக் கையில் பிடித்த பிள்ளை யார்?

வேலைக் கையில் பிடித்த பிள்ளை யார்?
கையில் வேலைப் பிடித்த பிள்ளை யார்?
யார் யார் யாரவரோ ... ... ?
அந்த சிவசக்தி முருகனே ... ...

முருகா முருகா வாமுருகா
வந்தே வினை தீரோயோ
வள்ளி மண வாளனே
வந்தே எம்மைப் பாராயோ

காக்கும் கடவுளே வாமுருகா
கலியுக வரதனே வாமுருகா
கையில் வேலைப் பிடித்தவா ... ... ஆ ... ...
வந்தே அருள் தருவாயே ... ...

ஆக்கம் : செல்வி கிருஸ்ணசாமி ஜமுனாதேவி
யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி

# சமயமும் சமுதாயமும்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்**

இன்றைய மானுடச் சாதியின் வாழ்க்கை நிலையினை எண்ணிப் பார்த்தால் நீக்கமுடியாத ஏக்கமே மேலிடுகிறது. மனிதன் கடந்த பல நூற்றாண்டுகளாகத் திறமையாகவே வாழ்ந்து வருகிறான்.; அவன் வாழ்க்கையில் அடிக்கடி நேர்ந்த இயற்கை இன்னல்களையும் வெற்றி பெற்றிருக்கிறான். அவனைச் சுழலச் சிதற அடித்த காலத்தை வென் றிருக்கிறான். பேருலகத்தை இணைத்து வெற்றி பெற்றிருக்கிறான். அம்மம்மா? அரிய சாதனை! அற்புதச் சாதனை!

என்பாட்டி இனிதாகக் காட்டிச் சோறூட்டிய அம்புலியைக் குடியேறிக் கூடாரமாக்கும் குரல் கேட்கிறது. அவனுடைய அறிவுச் சுவடுகள் பதியாத மண்டலங்கள் இல்லை. அண்டங்கள் இல்லை; நினைந்து நினைந்து மகிழத்தக்க சாதனை!

ஆனாலும் சாதனையின் மகிழ்ச்சியை முழுவதும் துய்க்க முடிய வில்லை. காரணம் உட்பகை ஒய்ந்தபாடில்லை.

நிலவுலகங்கள் இணைக்கப்பெற்றன. ஆனால் இணைக்கவேண்டிய சிறந்த நெஞ்சங்கள் இணைக்கப் பெறவில்லை.

செல்வங்கள் செழித்து வளர்ந்தன ஆனால் அல்லல் தரும் வறுமை போய் விடவில்லை. கருத்துக்கள் வளர்ந்தன. ஆனால் மோதிக் கொள்ளும் விலங்குணர்ச்சி போனபாடில்லை.

உலாவும் மாளிகைகள் உயர்ந்தன. ஆனால் ஒழுக்கத்தில் உயர் வில்லை.

திருக்கோயில்கள் எழுந்தன. ஆனால் சிறைச்சாலைகள் முடப் பெறவில்லை.

கடவுளின் கருணை பேசப்பெற்றது. ஆனால் இரக்கம் என்பதொன்று எள்ளளவும் சிந்தையில் உண்டாகவில்லை.

இ:தென்ன விந்தை! மாளிகை கட்டி முடிப்பது வாழ்ந்தின்புறவா? அல்லது வாழ்விழந்து துன்புற்று அல்லல்படவா? இந்த அவல நிலைக்குக் காரணம் உண்மையான சமயச் சீலம் உலகில் தோன்றி வளரவில்லை என்பதேயாம்!

சமயநெறி என்பது உடற்சார்புடையதன்று நீங்கா உயிர்ச் சார் புடையது. ஆனால் இன்றோ சமயம் பெரும்பாலும் உடற் சார்புடைய தாக மட்டுமே விளங்குகிறது. சமயச் சின்னங்களை நெற்றிகள் தாங் கினாலும் நெஞ்சங்கள் தாங்கவில்லை. மைபொதி விளக்கனையார்

மலிந்து வருகின்றனர். ''பூச நீறு போல் உள்ளம் புனிதர்கள்'' என்ற சேக்கிழாரின் செந்நெறிக்கு ஏற்றவாறு நெஞ்சுணர்வில் தூய்மை படரவில்லை. சமயமும் ஒரு வளர்ந்த அறிவியலேயாம். எப்படி விஞ் ஞானத்தின் விளைவு வீணாகப் போவதில்லையோ அது போலவே சமயச் செந்நெறியின் பயனும் வீண் போவதில்லை.

தண்ணீரில் கிடப்பது மீனுக்குப் பொழுது போக்கன்று: அஃது ஒரு பகுதி வாழ்க்கையுமன்று: தண்ணீரில் கிடப்பதேதான் மீனுக்கு வாழ்க்கை. அதுபோல நமக்கும் சமய வாழ்க்கை அமைய வேண்டும்.

ஆனால் சமயம் சிலருக்குப் பொழுது போக்கு; பலருக்குப் போலிப் பாவக்கழுவாய்.

ஒரு சிலருக்கு அதுவே வாழ்க்கைத் தொழில். வேறு சிலருக்கு வளம்பல படைத்து வாழும் வகை.

இதுவா சமயம்? நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் எழுந்தும் என்ற திருஞான சம்பந்தர் திருமொழியை எண்ணுங்கள்.

''என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு இயங்கினான்'' என்ற அப்பரடிகளின் அருள் மொழியை எண்ணுங்கள்

சமய ஒழுக்கம் ஒரு மனிதனின் வாழ்க்கை முழுதும்கலந்து கொண் டிருக்கவேண்டும். சிந்தனையும் செவ்விய சொல்லும் செயலும் சமயச் சீலம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அவனுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சமயத்தின் மாறா முத்திரை பதிந்து விளங்க வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் முழுமனிதனாகிறான். அவன் கடவுள் விரும்பும் பொருளுமாகிறான்.

★ ★ ★

### முழுமையாய்

மழையெனப் பொழிந்து கருமுகிலாய்
மண்பயனுற்று மணியெனத் தானியங்கள்
விளையத் திருவினையதனை யருள்
புரியுமெங்கள் வீரத்துக் கதிபதியே!
முளையெனத் தளிரும் சமாதானச் சூழலை
முழுமையாகத் தருவாயே — தெல்லிப்
பழையுறை யமர்ந்து அடியவர்கள்
துயர்களையும் ஸ்ரீ துர்க்கா!

### நல்போக சுகங்கள்

ராகுகாலப் பூசை யேற்கும்
ராஜயோக மளிக்கும் துர்க்கா!
பாகுபால் பழம் பண்ணிசையுடன்
பாட்டு முனக்கு படைத்திடுவேன்
நாக தோசம் கிரக பாவப்
அனைத்தும் நீக்க — நல்
போக சுகங்கள் புகழ்கள் அனைத்
தும்கிட்ட அருள்வாய் தாயே!

இராம ஜெயபாலன்
கொக்குவில்

# சுந்தரர் காட்டிய நெறி

வித்துவான் க. ந. வேலன் அவர்கள்

சுந்தரர் அருளிய பாமாலை, பன்னிரு திருமுறைகளுள் ஏழாவதாக அமைந்துள்ளது.

இத்திருமுறையில் ''பித்தா பிறைசூடி'' என்னும் திருப்பதிகம் முதலாகத் ''தானெனை முன்படைத்தான்'' என்னும் திருப்பதிகம் ஈறாக நூறு திருப்பதிகங்கள் உள்ளன.

இறைவன் சுந்தரரை வலிய வந்து தடுத்தாட்கொண்ட கருணைத் திறத்தை நினைந்து நெஞ்சுருகிப் பாடிய பாமாலை, ''பித்தா பிறை சூடி'' என்னும் திருப்பதிகமாதலினால் அது இத்திருமுறையின் முதற்கண் அமைவதாயிற்று. கயிலைப் பெருமான் ஆணையின் வண்ணம் வெள்ளை யானையில் வந்து திருக்கைலாயத்துக்குச் சென்றார் என்பது வரலாறு. அப்பொழுது பாடிய திருப்பதிகம் ''தானெனை முன் படைத்தான்'' என்பதாகலின் அப்பதிகம் இந்த ஏழாம் திருமுறையின் இறுதிக்கண் வைக்கப்பெற்றுள்ளது.

சுந்தரருக்கு முன் வாழ்ந்த சம்பந்தர் நாவுக்கரசர் காலத்தில் இருந்த சமயப் பூசல்கள் அப்பெருமக்களால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன தமிழகத்தில் அமைதி நிலவியது.

அக்காலத்தில் வாழ்ந்த சுந்தரர் பாடல்களில் சமணம், பௌத்தம் முதலிய சமயங்களைப் பற்றிய கண்டனங்களுக்கு இடம்ஏற்படவில்லை.

சுந்தரர் பாடல்களில் சம்பந்தரைப் போல உளங்குளிர்ந்த போதெல்லாம் உகந்து பாடும் உவகைத் திறத்தையும் நாவரசர் பதிகங்கள் போன்று பிழை நினைந்து ஏசறும் இரங்கலுணர்வையும் ஒருங்கே காணலாம்.

இறைவனைத் தம் உயிர்த் தோழனாக எண்ணி அப்பெருமானுடன் அன்பில் நயந்து விளையாடியும் வன்கண்மையுடன் ஊடி இடித்துக் கூறியும் தமக்கு இன்றியமையா அனைத்தையும் இறைவன்பால் வேண்டிப் பெறும் உரிமை உடையவராகச் சுந்தரர் விளங்கினார். இந்தத் தோழமை நெறி, அடியார்களுள் வேறெவரிடத்தும் காணப்பெறாத ஒன்றாகும்.

சுந்தரரிடம் காணப்பெறும் மற்றொரு சிறந்தநெறி, தத்துவம் என்று கூடச் சொல்லக்கூடிய நெறி, சரியை முதலிய நால்வகை நெறிகளுள் போகநெறியில் நின்று, பெற்ற சிற்றின்பமே பேரின்பமதாக முற்று வரும் தன்மையில் போகத்தை யோகமாக மாற்றி முத்திநெறிக்கு வழி காட்டி முத்தி பெற்றதாகும்.

போகத்தை நுகர்ந்து கொண்டே யோகியாக, சீவன் முத்தராக வாழும் நெறியைச் சைவ சித்தாந்த நூலாகிய திருஉந்தியார், சுருக்மாக

''பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும்பரிசு உந்திபற''

எனக் கூறுகின்றது. இதனை விரித்துக் கூறும் சிவஞான சித்தியாரிலுள்ள திருவருத்தம் படித்துப் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவ சங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வது என் இம்மையிலே உயிரின்
பற்று அறுத்துப் பரத்தை அடை பராவு சிவர் அன்றோ
ஆக்குமுடி கவித்து அரசு ஆண்டவர்கள் அரிவையரோடு
அனுபவித்து அங்கு இருந்திடினும் அகப்பற்றற்று இருப்பர்
நோக்கி இது புரியாதோர் புறப்பற்று அற்றாலும்
நுழைவர் பிறப்பினில் வினைகள் நுங்கி பரவே.

சமய நெறிநிற்போரில் பலர் புறத்தில் பற்று அற்றவர்போல் காட்டி உலகை ஏமாற்றி அகப்பற்றோடு வாழ்வர். இதற்குக் காரணம் கூற வந்த வள்ளுவர்.

''வலஇல் நிலைமையால் வல்லுருவின் பெற்றும்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று''

எனக்கூறுவார். சனகன், சுந்தரர் போன்றோர் அரசு ஆண்டவர்கள், அரிவையரோடு அனுபவித்து இருந்தவர்கள், புறத்தே பற்று அறாதவர் போல் தோற்றம் கொண்டிருந்தாலும் அகப்பற்று அற்று வாழ்ந்தவர்கள்.

''செயலில் செயலின்மையும் செயலின்மையில் செயலும்'' எனக் கீதை கூறும் இருநிலைகளுள் இவர்கள் செயலில் செயலின்மை கொண்டு வாழ்ந்த சீவன்முத்தர்கள். இந்நெறியில் வாழ்ந்து காட்டிய அடியார்களுள் சுந்தரர் ஒருவராவர். எல்லாம் அவன் செயலெனத் தற்போது மற்ற இவர்கள், ''பொருந்து அணைமேல் வரும் பயன்'' கூட அவனே என நாவரசர் கூறுவதுபோல தெளிந்த ஞானமுடையவர் சுந்தரர்.

''மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டினை'' எனவும் ''சங்கியோடு எனைப்புணர்த்த தத்துவனை'' எனவும் பரவை, சங்கிலியார் இருவர் இணைப்பும் இறைவனால் ஏற்பட்டவையே. அவை என் செயலல்ல எனக் கூறுகின்றார்.

தோழமை நெறியும் போகத்தை யோகமாக்கிய நெறியும் சுந்தரர் காட்டிய நெறியாகும்.

உலகம் விரிந்தது; பரந்துபட்ட பரப்புடையது; சிந்தனை வேறுபாடுகள் உடையது; மொழி வேறுபாடுகள் உடையது; சமயங்களின் வேறுபாடுகளும் உடையது. வேறுபாடுகள் உண்டாயினும் உயிர் ஏடேற்றம் என்ற இலட்சிய ஒருமைப்பாடும் உலகத்திற்கு உண்டு. எல்லா மொழிகளுக்கும் எல்லாச் சமயங்களுக்கும் இலட்சியம் ஒன்றேயாகும்.

அதனை அணுகும் முறைகளிலேயேதான் வேறுபாடு. இந்த வேறு பாடுகள் தவிர்க்க முடியாதவை. இவை வேறுபாகளே தவிர மாறு பாடுகளல்ல. வளர்ச்சியின்படி முறைகளேயாம். இவைகளுக்கு சமரசம் வேண்டும்.

சமரசம் என்றால் கலப்படம் செய்வதென்றும் பொருளன்று. இன்று சிலர் சமயத் தத்துவக் கலப்படம் செய்கிறார்கள். உணவுக் கலப்படத்தை விடத் தத்துவ அறிவுக் கலப்படம் மிகவும் கொடுமையானது. கலப்படம் உயிர் விளக்கத்தைத் தடை செய்யும்.

தெளிவில் தோன்றுவது விளக்கம். தத்துவ விளக்கத்தில் தோன்று வது இறையருளின் இன்பக் காட்சி. இதனை ''சிந்தையுள் தெளிவு மாய் தெளிவினுள் சிவமுமாகிய'' என்று அருள் நூல் எடுத்துக் காட்டு கிறது. வளர் நெறிகளின் மாட்டு வெறுப்பின்றி உயர் நெறியிடத்து விருப்பம் காட்டுவதே முறை. சிறந்த வாழ்க்கை நெறிகள் பலவுண்டு. காலத்திற்கு காலம் நெறிகள் வளர்ந்து வருகின்றன. இதனை நெறி யெலாம் புலம் ஆக்கிய என்ற மணிவாசகர் மணிமொழியால் உணர லாம். உலகில் எல்லாச் சமயங்களும் சிறப்புடையனவேயாகும். அவற் றில் ஏதொன்றும் தாழ்ச்சியுடையதன்று. அவை மனித உலகத்திற்கு செய்திருக்கின்ற சேவைகள் நினைந்து நெகிழ்ந்து வாழ்த்துதற்குரியன. ஆயினும் தத்துவ வளர்ச்சியிலும் தத்துவப் பார்வையிலும் தமிழகச் சித்தாந்தச் சமய நெறி உயிர்ப்புடையதாக விளங்குகிறது. சித்தாந் தம் என்றாலே முடிந்த முடிபு என்று பொருள். இனிமேல் வினாக்கள் எழுப்ப முடியாத அளவுக்குத் தத்துவத் துறையிலும் வாழ்க்கை முறை யிலும் முழுதுற வளர்ந்த நெறி சித்தாந்த சைவமே.

செந்தமிழ்க் குமரகுருபர அடிகளும் ''ஓதும் வேதாந்தமென்ற உச்சி யிற் பழுத்த'' என்று இதனைப் பாடியுள்ளார்கள் இங்ஙனம். கூறுவது சார்பின் காரணமாக எழுந்த பற்றினால் அன்று. உண்மையிலேயே அறிவின் அடிப்படையிலும் வாழ்க்கை இயலும் வைத்து ஆராய்ந்தால் சிவநெறி சிறந்து விளங்குமுண்மை எல்லார்க்கும் நன்கு பெறப்படும்.

* * *

## சுபகாரியங்கள் செய்யக்கூடாத மாதங்கள்

ஆடியில் இராவணன் மாண்டதும்,
மார்கழியில் பாரதப் போர் முண்டதும்
புரட்டாசியில் இரணியன் இறந்ததும்,
மாசியில் ஈசன் நஞ்சு அருந்தியதும்,
பங்குனியில் காமன் வெந்ததால்

ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, பங்குனி, ஆகிய ஐந்து மாதங்கள் சுப காரியங்கள் செய்ய ஏற்றதல்ல.

# திருமுறை நெறி

**தவத்திரு. இராமசாமியடிகள்**

உலகில் உயிரினம் மேம்பட வகுக்கப்பட்ட நெறிகள் பல. அந்நெறிகள், அறிவுடைப் பெருமக்களால், இதுவே மக்களினத்திற்கு ஏற்றது என நாடு, சூழல், பண்பாடு ஆகியவற்றையொட்டி வலியுறுத்தப்படுகின்றன. நமது நாடு அருள்வளர்த்த தெய்வத் தமிழ்நாடு. இனிமைத் தமிழால் வாழ்க்கை நெறியை வகுத்துள்ள நாடு. உயிராக்கத்திற்குரிய தெளிந்த முடிவான சமயக் கொள்கையை உடைய நாடு. நம் நாட்டில் அருள் நெறி வளர்த்த மோலோர்கள் பலர். அவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பண்பாட்டால்; கலைத்தீறத்தால்; அகவுணர்வால்; நாட்டைவளம்பெறச் செய்துள்ளனர். வாழ்க்கையோடு இயைந்த சமய நெறியை வளர்த்துள்ளனர். எல்லாச் சமயக் கருத்துக்களையும் ஏற்று அவற்றினும் முடிவான கொள்கையை வற்புறுத்தியுள்ளனர்.

இறை, உயிர், தளை என்னும் முப்பொருளை உணர்த்துவது நம் சமயம். உயிர் தன்னழுக்கு நீங்கி இறைத்தன்மையை எய்தச் சாதனங்கள் வகுக்கப்பட்டுள்ளன. உயிர் தூயதாதற்கு, தெளிவும் கசிவும்வேண்டும். தெளிவு பெற்ற உயிர் கசிந்துருகப் பயிலும், தெளிவுக்கு மனமாசுகள் நீங்க வேண்டும். மனம் ஒரு வழிப்படுதற்கு எத்தனையோ முயற்சிகளை மேற்கொள்ளுகிறோம். கல்வியால் நல்லனவற்றை அறிந்து, அந்நெறியில் அறத்தைச் செய்ய முயல்கிறோம். ஒழுக்கநெறியில் அறத்தைச் செய்ய வேண்டும். அறத்தால் வரும் இன்பமே நிலைபேற்றுக்குரிய இன்பம். அவ்வறம் இந்திரன் முதலியவர் பதங்களில் வாழ்விக்கிறது. முடிவில்லாத பேரின்பமாகிய முத்திச் செல்வத்தையும் தருகின்றது. இத்தகைய அறச் செயல்களே உயிர்க்கு உறுதி பயப்பன. அன்பு உடையவர்களையே பண்பாடு உடையவர்கள் என்கிறோம். அவர்கள் செய்வன நற்செயல்களாகின்றன.

இன்று நாட்டில் அறச்செயல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அவை அன்பின் வழிபட்டனவாகப் பெரும்பாலும் காணப்படுவதில்லை. விளம்பரத்தை, புகழுரையைக் கருதிச்செய்யப்படுகின்றன. சிறிய அறச் செயலால் பெரிய விளம்பரத்தை விரும்புகின்றனர். தாம் செய்யும் பல தீங்குகட்கு, கழுவாயாகச் செய்கின்றனர். அவை, தீய வழிகளில்தேடும்பொருள்களைக் காத்துக்கொள்ளச் செய்யும் முயற்சியாக இருப்பதைப் பார்க்கிறோம். வஞ்சகத்தால் பிறரை வருத்துவதால் பொய்மையால் வரும் பொருட்களைக் காக்கச் செய்யும் அச்செயல்கள் சுடப்படாத மண்பானையில் நீரை நிறைத்து அதற்குப் பூணிட்டுக் காப்பது போலத்தான் ஆகும். ஒரு காலத்தில் கோயில் கட்டியவர்கள் தம் செயலைக் கல்வெட்டால் செதுக்கினர். அதுவும் பிறர் அப்பணியில் ஈடுபடுவதற்காக, ஆனால்இன்று

ஒரு விளக்குச் சிமிளியைப் பொருத்தினாலும் அதில் தம் பெயரும் பீடும் எழுதுகின்றனர். செய்த அறச் செயலை விட விளம்பரம் பெரிதாக அமைவதைப் பார்க்கிறோம்.

ஆனால் நமது திருமுறையாசிரியர்கள் அறச்செயலைத் தூண்டிய முறை வேறு. அவர்கள் சமுதாய வளர்ச்சியோடு மனிதகுல மேம்பாட்டோடு பிணைத்த சமயத்தை வளர்த்தார்கள். 'அன்பே சிவம்' என்ற கொள்கை உறுதி பெற்றிருந்தது.

''இலங்கு முயிருடலனைத்தும் ஈசன் கோயில்' என்பதை உணர்த்தி வந்தனர். 'எல்லாவுயிரும் இன்புற்றிருக்க' எண்ணுவதும் செய்வதும் அவர்கள் கொள்கையாக இருந்தன. சில அறச்செயல்கள் எல்லாவுயிர்க்கும் பயன்படுவன. அத்தகைய அறங்கள், செய்தோரைவெளிப்படுத்தாதன. அவற்றைச் செய்வது சிறப்பது. சிலர் இன்னொருவருடையது இவ்வறச்செயல் என வெளிப்பட இருப்பின் விரும்பாமலும் விலகலாம். ஆதலின் செய்தோரை வெளிப்படுத்தாத அறங்கள் உயிர்க்காக்கங் கருதியே செய்யப்பெறுவன. புகழ் கருதாதன. அன்பின் வழிப்பட்டன.

கோடை வெய்யிலில் வெளியே புறப்படுகிறோம். நீண்ட பயணமாகச் செல்லுகிறோம். நாம் செல்லும் வழி வளமற்ற பகுதி. நண்பகல் உச்சி வெயில் என்றால் அப்பொழுது அவ்வழியில் சாலை மரங்கள் இருப்பதை அனைவரும் விரும்புவோம். மக்களினம் மட்டுமல்ல. மற்ற உயிர்க்கூட்டமும் விரும்பும். வழியே நடந்து செல்லும் உயிரினங்கள் அந்த மரநிழலிலே தங்கி இளைப்பாறும், பயன் தரு மரமாயின் அதன் பழங்களை உண்டு பசி தீரும். இது யாரால் வைக்கப்பட்டது என்பதை அச்சாலையில் விளம்பரப்படுத்த முடியாது. இன்னாருக்கு என்று இன்றி எல்லோருக்கும் அன்பின் வழியாகப் பயன்படுவதே இவ்வறச் செயல். இது இறைவன் தன்மையாக விளங்குகிறது. ''கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் வகை கிடைத்தது இம்மரச்சாலை நிழல். இதுபோல தீஞ்சுவைத் தண்ணீர் வேனிற் காலத்து வழி நடப்போர்க்கும் மற்றையவர்க்கும் வேண்டப்படுவது. அதற்காகக் குளங்கள் வெட்டுவதும் எல்லோருக்கும் பயன்படும் அறச்செயல், இவைகளைச் செய்வது நமது கடமை என்ற உணர்வோடு செய்வதற்கு வழி காட்டுவது நமது சமயம்.

புகழுக்காகவோ, விளம்பரத்திற்காகவோ இச்செயல் நடைபெறலாம். அல்லது அறிவால் நன்மை என்று கருதிச் செய்வதும் உண்டு. அவை அன்பின் வழிப்படாவிட்டால் மனதைத் திருத்தாது. மகிழ்வைத் தராது. மகிழ்வும் தெளிவும் இல்லாத மனத்தால் இறைவனை வழிபடுதல் பொய்யாகவே முடியும். ''பொக்கமிக்கவர் பூவும் நீரும்'' இறைவனுக்கு ஏற்புடையது அல்ல. மெய்மையான அறச்செயலால் மனங் கசிந்தவர்களே உள்ளவாறு வழிபட முடியும். அவ்வாறு வழிபட்டால்தான் தீவினைகள் வருத்தாது. அவை வருத்தாமல் நஞ்சுண்ட கண்டத்தராகிய இறைவன் நம்மைக் காப்பார் என்பதை,

''காவினை யிட்டும் குளம்பல
தொட்டும் களிமனத்தால்
ஏவினையாலென்று மூவெயில்
செற்றீரென்று இருபொழுதும்

பூவினைக் கொய்து மலரடி
போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்
பெறாதிருநீல கண்டம்''

என நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் அருளிய திருமுறை கூறுகிறது.

அறஞ்செய்து களித்த மனத்தால் இறைவனை வழிபட்டால் தான் தீவினை தீண்டாது. இறைவனை இருபொழுதும் வழிபடவேண்டும் தாமே மலர்கொய்து இறைவனது திருவடியிலிட்டும் போற்ற வேண்டும் என்பது ஞானசம்பந்தப் பெருமான் காட்டும் அருள்நெறி. அவ்வாறு 'போற்றி' என்று சொல்லி வழிபடுவோர்க்குப் பொருளும் இன்பமும் நல்குகிறான் என்றும் கூறுகின்றார்.

சாலைகள் வைப்பதும் குளங்கள் வெட்டுவதும் மற்ற அறங்களைப் போன்றதன்று. சமுதாயஅறங்களாக விளங்குகின்றன. மண்டபம் கட்டுகிறோம் கோயில் அமைக்கிறோம்; இவை போன்றவை யான், எனது என்னும் பற்றுக்களை வளர்ப்பனவாகவும் அமையும்.

என் சமயம் எனது கூட்டம் என்று பிரித்து உணர்த்துவன சில. சாலையில் எல்லோரும் நடக்கலாம், ஒருவருக்கு உரியது அன்று. நாட்டுக்கு உரியது. குளமும் எல்லோருக்கும் பொது. அதுவும் சமுதாய நலத்துக்கே உரியதாக அமைகிறது. நால்வர் பெருமக்களும் நாயன்மார்களும் இத்தகைய பணிகளையே பெரிதும் ஆற்றியுள்ளனர்.

இதனையே சேக்கிழார் பெருமான் விரிவுபடுத்துகிறார். அப்பரடிகளுடைய வாழ்க்கையைக் கூறும் போது அவருக்கு இளமையில் தாய் தந்தையர் பிரிவும் பிறவும் நில்லாதவுலகியல்பைக் காட்டியது. நிலையா வாழ்க்கையை உணர்ந்தார். அதில் வாழ விரும்பவில்லை. அதனால் தம்மிடத்திருந்த பொருளை ஈந்து உவக்கும் இன்பமாகிய அறச்செயல்களுக்கு உதவினார். அவ்வாறு செய்த அறங்களில் ஞானசம்பந்தப் பெருமான் அருளிய அறச்செயல்களே முதலாகச் செய்தார். பின் தன்னை வந்தடைந்தோர்க்கும் வேண்டியன நல்கினார் என்பதை

''காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்றார்''

என்று கூறுகின்றார் சேக்கிழார்.

இதில் நானிலத்துள்ளோர் யாவருக்கும் இல்லையென்னாது ஈகை செய்தார் எனவும்; உலகில் பிறந்தோர் அனைவரும் கைக்கொள்ளற்குரியது ஈகை எனவும் பொருட்பட, நானிலத்துள்ளோர் யாவருக்குந் தவிராத ஈகை வினைத்துறை'' என்று நயம்படக் கூறியுள்ளார். ஈகை வினைத்துறை நின்றாலும், நல்லாறு தெரிந்து இறைவனை வழிபடவேண்டும். அவ்வழிபாடே கசிந்துருகி வினை நீக்கம் பெறுதற்குரியது என்பதைத் திருமுறைகள் உணர்த்துகின்றன. உயிர்க் கூட்டங்களுக்கும் சமுதாயத்துக்கும் பயன்படும் நற்செயல்களைச் செய்து, இறைவனை வழிபடுவதே திருமுறை நெறியாகும்.

# முருகன் சல்லாப விநோதன்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்.

இந்த நாட்களெல்லாம் முருகனுடைய அருளைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் நாட்களாகும். முருகனைப் பாடப் பேசப் போற்ற நல்வாய்ப்பைப் பெறுகிறோம். கந்தன் என்ற நாமமே ஒரு பெரிய பற்றுக் கோட்டைக் காட்டுகின்றது. அருள் கொழிக்கும் திருவடிவமும் ஆறு திருமுகங்களும் பன்னிருகரங்களும் கருணைததும்பும் விழிகளும் இரு புறமும் இச்சா கிரியா திருவுருவங்களாகிய தேவியர்களும் மயில் மீதமர்ந்த திருக்கோலமும் திருக்கரத்தில் ஏந்திய வேலும் நம்மகத்தும், புறத்தும் காட்சிதருகிறது. இந்நாட்களிலே முருக விரதம் மேற்கொண்ட முருகனடியார்கள் முருகனின் பேரருளில் திளைக்கிறார்கள். குன்று தோறாடும் குமரக் கடவுளை உள்ள முருகி வழிபட்டால் ஒரு தாழ்வும் இல்லையென்பது பெரியோர் வாக்கு.

"சாந்துணைப் போதும் மறவாதவர்க் கொரு
தாழ்வில்லையே"

எண்ணியதை முடிக்கும் சிறப்பு முருகப் பெருமானின் முதன்மைச் சிறப்பு. முன்னியது முடித்தலின் முருகொத்தீயே என்று புறநானூற்றுப் புலவர் பாடுகிறார்.

மிகப்பழங்காலந் தொட்டே முருகனுடைய கருணைத் திருவிளையாடல்களை நினைந்து பாடிப்போற்றி வந்தவர் தமிழர். தமிழர்கள் முருகனிடம் பேரன்புக்கு காரணம் அவனைக் குறிஞ்சித் தலைவனாக வைத்திருப்பதே மிக உயர்ந்த இடம். அதுவுமன்றி நக்கீரர் முருகனைப் பற்றியே தனி நூல் ஒன்று இயற்றினார். அது தான் திருமுருகாற்றுப் படை. வேறு எந்தத் தெய்வத்தைப் பற்றியும் அந்த அளவில் ஒரு நூல் சங்கத்தமிழில் இல்லை. இப்படியாகப் பழந்தமிழ் நூற் செய்திகளால் தமிழர் முருகனுக்கு அளித்த தலைமைத் திறம் நன்றாக விளங்குகிறது.

இனி முருகன் சல்லாப விநோதன் என்பதைப்பற்றிய சில நிகழ்ச்சிகளைக் கவனிப்போம். அவன் சல்லாப விநோதன் என்பதை அவனது ஆனந்த அனுபவத்தைப் பெற்ற அருணகிரி நாதரே தெளிவுபடுத்துகிறார்.

"உல்லாசநிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலவோ"

என்கிறார்.

முருகு என்றால் இளமை என்பதும் ஒரு பொருள். இளையவன் ஆதலினால் அவன் செய்வனயாவுமே விளையாட்டுத்தான். இறைவன் எந்தக் கோலத்தில் எழுந்தருளி எந்தச் செயலைச் செய்தாலும் அதைத் திருவிளையாட்டு என்று சொல்வது வழக்கம்.

முருகன் பால் சுவைக்கிறான். அழுகிறான் சரவணப் பூந்தொட்டி லில் ஆடுகிறான். இவையெல்லால் விளையாட்டுத்தான்

''திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பால் அருந்திச் சரவணப் பூந்தொட்டிலேறி அறுவர் கொங்கை விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும் குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்றோதல் குவலயமே''

சரவணப் பொய்கையில் ஆறு திருமேனியுடன் எந்தை கந்தவேள் திருவிளையாடல் செய்தபோது உமையம்மையார் கண்ணுதற் கடவுளுடன் சென்று அவ்வுருவம் ஆறினையும் தன்னிரண்டு கையால் எடுத்தணைத்து கந்தன் எனப் பெயர் புனைந்து பால் அமுது கொடுத்து அணைத்தார். இச் செயலைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

எள்ளத் தனைவந்துறுபசிக்கும் இரங்கிப்
பரந்து சிறுபண்டி
எக்கிக் குழைந்து மணித் துவர்வாய்
இதழைக் குவித்து விர்த்தமுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டில் உதைத்துப் பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீர் ஒழுகத்
தோளில் மகரக் குழை தவழ
மெள்ளத் தவழ்ந்து குறுமுரல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம் பார்த்து
வேண்டும் உமையாள் களபமுலை
வள்ளத் தமுதுண்டக மகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்மை முலை
வள்ளி கணவா வருகவே.

இங்கே பிள்ளைத் தமிழ் பாடலில் முருகனை சல்லாப விநோதனாக காண்கின்றோம். இவ்வாறு புராணங்களிலும், பிற்காலப் பக்தி இலக்கியங்களிலும் எம் பெருமான் முருகனைக் கண்டு பாடி களித்து இன்புறுவோமாக.

# ஈழத்தில் சக்தி வழிபாடு

செல்வி சு. சித்திராதேவி B. A. அவர்கள்

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைத் தாய் வடிவில் கண்டு வழிபடுதலே சக்தி வழிபாடாகும். அம்மா என அழைக்காத உயிர்கள் இல்லை. உலகத்தின் தோற்றமே தாயில் இருந்துதான் ஆரம்பமாகிறது. சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொள்வோர் சாக்தர்கள் என அழைக்கப்படுவர்.

இற்றைக்குப் பல ஆயிரம் வருடங்களுக்கு முந்திய சிந்துவெளி நாகரிக காலத்திலேயே சக்தி வழிபாடு நிலவியதற்கு ஆதாரங்கள் உண்டு. மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப காலத்திலேயே சக்தி வழிபாடு ஆரம்பமாகி விட்டது. அது இன்றுவரை தொடர்கிறது.

தமிழகத்தில் மிகப் பழைமையுடைய சக்தி ஆலயங்கள் பல காணப் படுகின்றன. நான்மாடக் கூடலில் அருளாட்சி புரியும் மதுரை மீனாட்சி காஞ்சிக் காமாட்சி, காசி விசாலாட்சி என சக்தி வழிபாட்டின் பழைமையையும் பெருமையையும் இவ்வாலயங்கள் எடுத்தியம்புகின்றன.

தமிழகத்தைப் போலவே ஈழத்திலும் சக்தி வழிபாடு மிகப் பழைய காலத்திலிருந்தே நிலவி வருகின்றது. வரலாற்றுப் புகழ்மிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும். ஈழத்திலே சக்தி, துர்க்கை, காளி, முத்துமாரி எனப் பல வடிவங்களில் பக்தர்களுக்கு அருள் புரிகின்றாள்.

ஈழத்தில் புகழ்பெற்ற சக்தி ஆலயங்களாக நயினை நாகபூசணி அம்மன், திருகோணமலைக் காளி அம்மன், தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன், மாத்தளை முத்துமாரியம்மன் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் குலதெய்வங்களாக காளி, மாரியம்மன் கோவில்கள் ஊர்கள் தோறும் காணப்படுகின்றன. இவ் அம்மன் ஆலயங்களில் அனேகமானவற்றில் பூசை வழிபாடுகள் ஆகம முறைப்படி மிக நேர்த்தியுடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் அம்மன் ஆலயங்களோடு இணைந்ததாக நவராத்திரி விரதம், கேதாரகௌரி விரதம், வரலஷ்மி விரதம் என்பன சிறப்பான முறையில் அனுட்டிக்கப்பட்டு இவ்வாலயங்களில் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. அதே வேளை சக்தி வழிபாடானது ஈழம் முழுவதும் பரந்து காணப்படுகிறது. வடக்குக் கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் மலையகத்திலும் கூட சக்தி வழிபாடு நிலவுகின்றது.

மலையகத்தில் சக்தி வழிபாடு ஆகம முறையிலும் தொன்றுதொட்டு பாமர மக்களால் செய்யப்பட்டுவரும் கிராமிய முறையிலும் நடைபெற்று வருகின்றது. கிராமிய வழிபாட்டு முறைகளாக முளைப்பாலிகைச் சட்டி எடுத்தல், (நவதானியம் முளைத்த சட்டியை ஆற்றில் கரைத்தல்) கரகம் பாலித்தல் (அம்மனைப் கரகமாகப் பாவனை செய்தல்) போன்ற நிகழ்வுகளைக் கூறலாம். சக்தி வழிபாடு ஈழத்தில் இந்துக்களால் மட்டுமன்றி பௌத்தர்களாலும் செய்யப்படுகிறது. 'பத்தினித் தெய்யோ' என்ற பெயரால் அவர்கள் சக்தியை வளர்க்கின்றனர்.

சக்தி வழிபாடு ஈழம் முழுவதிலும் காணப்படுகிறது. சக்தியை வழிபடுவதினால் எமக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கிறது, இதனையே அபிராமிப்பட்டரும்,

தனம்தரும்; கல்விதரும் ஒரு
நாளும் தளர்வு அறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக் கண்களே!

எனப் பாடுகின்றார். எனவே வல்லமை தரும் சக்தியை வணங்கி எல்லா நலன்களையும் பெறுவோம்.

---

* * *

## அருள் ஒளியே வாழ்க!

அன்பர் தமக்கு
ஆனந்தங் காட்டி
இருள்தனை அகற்றி
ஈடில்லாத பெருமையோடு
உயர்வு கண்டாய்!
ஊக்கம் பல
எமக்களித்து நீ
ஏற்றங்கள் பெற்றாய்!
ஐஸ்வர்யமே நீ
ஒப்பில்லா கீர்த்தியோடு
ஓராயிரம் வருடங்கள்
ஔவைபோல் தமிழ் செய்து
அருள் ஒளியே நீ வாழ்வாய்!!

# ஆனி உத்தரம்



குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமுங் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.




அட்டைப்பதிப்பு : பிள்ளையார் அச்சகம், நல்லூர்